பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

06 08 2024 7 15

செவ்வாய்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u>-

1. ஃபிஜி நாட்டின் மதிப்புமிக்க **companion** விருது குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவுக்கு வழங்கப்பட்டிருப்பது இந்தியாவுக்கு பெருமை சேர்த்துள்ளது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
2. பங்ளாதேஷின் நிலைமை குறித்து இந்தியா உன்னிப்பாக கவனித்து வருகிறது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.
3. வேலைவாய்ப்புடன் இணைந்த பயிற்சி திட்டத்தை விரைந்து நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தொவித்துள்ளார்.
4. நாட்டின் முக்கிய துறைமுகங்கள் தனியார்மய மாக்கப்படவில்லை என்று மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.
5. பாரிஸ் ஒலிம்பிக் ஹாக்கி அரையிறுதி ஆட்டத்தில் இன்று இந்தியா – ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

*--- இனி விரிவான செய்திகள் ----*

[]<<<>>>[]

ஃபிஜி நாட்டின் மதிப்புமிக்க கம்பெனியன் விருது பெற்றுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வுக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவருக்கு வழங்கப்பட்டுள்ள இந்த விருது ஒவ்வொரு இந்தியனுக்கும் பெருமையையும், மகிழ்ச்சியையும் அளிப்பதாக அவர் கூறியுள்ளார்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வின் தலைமை பண்புக்கும், வரலாற்று சிறப்புமிக்க இந்தியா - ஃபிஜி மக்கள் தொடர்புக்கும் அங்கீகாரம் அளிக்கும் வகையில் இந்த விருது அமைந்துள்ளதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

பங்ளாதேஷில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் மற்றும் அங்குள்ள இந்திய மக்களின் நிலை குறித்து வெளியுறவுத்துறை உன்னிப்பாக கவனித்து வருவதாக அத்துறைக்கான அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் தாமாகவே முன் வந்து அறிக்கை தாக்கல் செய்து பேசிய அமைச்சர், அங்குள்ள சிறுபான்மையின மக்களின் பாதுகாப்பு குறித்த தகவல்களையும் கேட்டறிந்து வருவதாகக் கூறினார்.

பங்ளாதேஷூக்கு பணி நிமித்தமாகவும், உயர் கல்வி படிப்புக்காகவும் சென்றுள்ளவர்களுடன் தூதரகம் மூலமாக தொடர்பு கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பங்ளாதேஜூக்கு ஒன்பதாயிரம் இந்திய மாணவர்கள் உயர்கல்வி படிப்புக்காக சென்றிருப்பதாகவும், அந்நாட்டில் மொத்தம் 19 ஆயிரம் இநதிய மக்கள் வசிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

டாக்காவில் உள்ள இந்திய தூதரகத்தின் அறிவுரையை ஏற்று பெரும்பாலான மாணவர்கள் தாயகம் திரும்பி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்நாட்டு பிரதமர் திருமதி ஷேக் ஹஸீனா பதவி விலகுவதாக அறிவித்த பின்னர், இந்தியா வருவதற்கான அனுமதி கோரியதாகவும், அதன் பேரில் அவர் புதுதில்லி வர அனுமதி அளிக்கப்பட்டதாகவும் திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

பங்ளாதேஷில் விரைவில் சட்டம் ஒழுங்கு நிலைமை சீரடையும் என்று இந்தியா எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

டாக்காவில் உள்ள தூதரக அதிகாரிகளுடனும், அந்நாட்டின் அதிகாரிகளுடனும் இந்தியா தொடர்பு கொண்டு வருவதாகவும் திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

வேலைவாய்ப்புடன் இணைந்த பயிற்சி திட்டத்தை விரைந்து நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தொவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள இந்த திட்டத்தை விரைந்து நடைமுறைக்கு கொண்டு வருவது குறித்து தமது துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

அத்துறைக்கான இணை அமைச்சர் திருமதி சோபா கரந்த்லாஜே-யும் இக்கூட்டத்தில் பங்கேற்றார்.

அப்போது பேசிய திரு மன்சுக் மாண்டவியா, நாட்டின் நீடித்த உள்ளார்ந்த வேலைவாய்ப்புக்கான கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்பதில் அரசு உறுதியுடன் இருப்பதாகக் கூறினார்.

வேலைவாய்ப்புடன் இணைந்த பயிற்சி திட்டம், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுடன் பணியாளர்களுக்கு புதிய சலுகைகளை உறுதி செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இரண்டு ஆண்டுகளில் இரண்டு கோடி வேலைவாய்ப்புக்களை உருவாக்க வேண்டுமென்ற இலக்கோடு கொண்டுவரப்பட்டுள்ள இந்த திட்டத்தை நாடு முழுவதும் திறம்பட செயல்படுத்த அதிகாரிகள் ஒத்துழைப்பு தர வேண்டுமென்றும் திரு மன்சுக் மாண்டவியா கேட்டுக் கொண்டார்.

**[]<<>>[]**

பாதுகாப்பு தளவாடங்கள், விமானங்களுக்கான பாகங்கள், தானியங்கி மற்றும் உதிரி பாகங்கள், உயிரி தொழில்நுட்பம் உள்ளிட்ட 27 உற்பத்தித் துறைகள் மற்றும் சேவைகள் உற்பத்திக்கான இந்தியா திட்டத்தின் கீழ் வளர்ச்சி பெற்றுள்ளதாக மத்திய வர்த்தகத்துறை இணை அமைச்சர் திரு ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் அவர் இன்று எழுத்து மூலமாக அளித்துள்ள பதிலில், உற்பத்தித்துறையை ஊக்குவிக்க கடந்த 2014-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட உற்பத்திக்கான இந்தியா இயக்கம் அதிக அளவில்

முதலீடுகளை ஈர்த்து வளர்ச்சிக்கான கட்டமைப்பை உருவாக்கி தந்திருப்பதாகக் கூறியுள்ளார்.

புதிய கண்டுபிடிப்புகள் ஊக்கம் பெற்றிருப்பதாகவும் தெரிவித்துள்ள அவர், உலக அளவில் இந்தியாவை உற்பத்தி மையமாக உயர்த்துவதற்கு இந்த இயக்கம் பேருதவியாக இருந்தது என்றும் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

நாட்டின் முக்கிய துறைமுகங்கள் தனியார்மய மாக்கப்படவில்லை என்று மத்திய கப்பல் போக்குவரத்து மற்றும் துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் எழுத்து மூலமாக அவர் அளித்த பதிலில், துறைமுகங்கள் மற்றம் தேசிய நீர்வழி தடங்களின் உரிமை அரசிடமே உள்ளதாகக் கூறினார்.

கடந்த பத்து ஆண்டுகளில் நீர்வழித் தடங்களில் சரக்கு போக்குவரத்து ஆறு மடங்கு உயர்ந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2023-24-ஆம் ஆண்டில் 133 மில்லியன் டன் சரக்கு போக்குவரத்து நீர்வழித் தடங்களில் நடைபெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

நடப்பு ஆண்டுக்கான நிதி மசோதா மீது இன்று மக்களவையில் விவாதம் தொடங்கியது.

விவாதத்தை தொடங்கி வைத்து பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு அமர்சிங், நடப்பு ஆண்டு பட்ஜெட் அதிக வருமானம் ஈட்டுபவர்களுக்கு மட்டுமே சாதகமாக உள்ளது என்று தெரிவித்தார்.

வேளாண் துறையின் வளர்ச்சி இறங்கு முகமாக உள்ளது என்று கூறிய அவர், இதனால் விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்கும் அரசின் முயற்சி கேள்விக்குறியாக உள்ளது என்று தெரிவித்தார்.

பிஜேபி உறுப்பினர் திரு நிஷிகாந்த் துபே பேசுகையில், இந்த பட்ஜெட் புத்தாக்க நிறுவனங்களுக்கு உயிரூட்டியுள்ளதாகக் கூறினார்.

இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கித்தரும் பட்ஜெட்டாக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள மத்திய புலனாய்வு அமைப்புகள் சுதந்திரமாக செயல்படுவதாகவும், ஊழலை ஒழிக்கும் நடவடிக்கைகளை எவ்வித நிர்பந்தத்துக்கும் ஆட்படாமல் செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

ராணுவ ஆட்சேர்ப்புக்கான அக்னிவீர் திட்டம் மிகவும் பயனுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலா தலமாக விளங்குகிறது என்று மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ப ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து அவர் இன்று சென்னையில் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

சுற்றுலாத்துறைக்கு தொழில்துறை அந்தஸ்து வழங்கும் வகையில் மாநில அரசு சுற்றுலாக் கொள்கையை வெளியிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சுற்றுலா வளர்ச்சித் திட்டப்பணிகளை குறித்த காலத்திற்குள் முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை உட்பட மாநிலத்தின் பல்வேறு சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் திரு க ராமச்சந்தின் தெரிவித்தார்.

[]<<<>>>[]

இலங்கையில் தமிழர்கள் அதிகம் வசிக்கக்கூடிய யாழ்பாணம் நகருக்கு வரும் செப்டம்பர் மாதம் ஒன்றாம் தேதியிலிருந்து இண்டிகோ ஏர்லைன்ஸ் விமான நிறுவனம் சென்னையிலிருந்து விமான சேவையை தொடங்க உள்ளது.

இதுவரை அலையன்ஸ் ஏர் விமான நிறுவனம் காலை நேரத்தில் மட்டுமே யாழ்ப்பாணத்துக்கு விமான சேவையை இயக்கி வந்த நிலையில் இண்டிகோ ஏர்லைன்ஸ் நிறுவனம் புதிதாக விமான சேவையை இயக்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

பிரிட்டனில் வசிக்கும் இந்திய மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்று லண்டனில் உள்ள இந்திய தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

அந்நாட்டில் ஆங்காங்கே போராட்டங்கள் நடைபெற்று வருவதால் இந்திய மக்கள் தேவையின்றி ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்வதை தவிர்க்க வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உள்ளூர் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் செய்திகளை தொடர்ந்து கவனித்து அதற்கேற்ப தங்கள் பணிகளை திட்டமிட வேண்டுமென்றும் லண்டனில் உள்ள இந்திய தூதரகம் கேட்டுக் கொண்டுள்ளது.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா நேரடியாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

ஹாக்கி அரையிறுதி ஆட்டத்தில் இன்று இந்தியா – ஜெர்மனியை எதிர்கொள்கிறது. இப்போட்டி இரவு மணி 10-30-க்கு தொடங்குகிறது.

மகளிர் மல்யுத்தப் போட்டியின் 50 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் வினேஷ் போகத் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.